**தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.2 (அ) அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் பந்தி இலக்கம் 3.28 இன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சலை கணிப்பிடும் போது பெறுமானத்தேய்வுகளின் தாக்கம் சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஆண்டின் பெறுமானத் தேய்வு பெறுமதியான ரூபா 48,909,098 தொகைக்குப் பதிலாக ரூபா 75,522,058 | எதிர்வரும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த வழுக்கள் சரிசெய்யப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் சேர்க்கப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல் ரூபா 26,612,960 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,648,339 ஆன நூலகப் புத்தகங்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,947,180 ஆன நூலகப் புத்தகங்கள் நடைமுறையல்லாச் சொத்தாக இனங்காணப்படாமல் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நூலகப் புத்தகங்களின் மெய்மையாய்வு அறிக்கை கிடைத்த பின்னர் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நூலகப் புத்தகங்கள் சொத்துக்களாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கின் மீதி ரூபா 42,192,789 குறைத்தும் நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 42,192,789 அதிகரித்தும் காணபிக்கப்பட்டிருந்தது. | மேலதிக மீதியை சேமிப்புக் கணக்கிற்கு மாற்றும் திட்ட முறைமையின் பிரகாரம் சேமிப்புக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கு ஒன்றிணைந்தலாக வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்படுவதுடன் ஒன்றிணைந்த மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் மூலம் சரியான கணக்கு மீதி 2023 இன் இறுதி கணக்கு மீதிகளில் காண்பிக்கப்படும். | கணக்கு மீதிகளை தனித்தனியாக சரியாக காண்பித்தல் வேண்டும். |
| (இ) | சொத்தக்கள் பொறுப்புக்கள் கூற்றில் ஆதனங்கள் மற்றும் பொறிகளின் தேறிய பெறுமதியாக குறிப்பு 16 இன் பிரகாரம் ரூபா 588,850,615 காண்பிக்க வேண்டிய போதிலும் ரூபா 853,362,503 கிரயப் பெறுமதி காண்பிக்கப்பட்டதன் காரணமாக சொத்துக்கள் ரூபா 264,511,891 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது சரியான பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் நடைமுறை வேலைக் கணக்கின் ஊடாக நிலையான சொத்துக் கணக்கிற்குக் கொண்டுவரப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சொத்துக்களைக் கொள்வனவு செய்த ஆண்டின் போது பெறுமானத் தேய்வு செய்யாதிருக்கின்றமை கணக்கீட்டுக் கொள்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிற்காக பெறுமானத் தேய்வு கணிப்பிடல் ரூபா 3,271,819 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 இன் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். | மேற்படி |
| (உ) | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 16 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 11,051,891 ஆன கிரயம் மற்றும் பெறுமானத் தேய்வு பெறுமதி மொத்த சொத்துக்களில் கிரயம் மற்றும் மொத்த பெறுமானத் தேய்வு பெறுமதியில் இருந்து நீக்கப்பட்டு சொத்துக்கள் அகற்றுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கணனிகளின் பெறுமதி ரூபா 1,094,600 நடைமுறை அயலலாச் சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான நிலைமை ஒன்று எதிர்காலத்தில் ஏற்படமாட்டாது. | சரியாகக் கணக்கீடு செய்யதல் வேண்டு. |
| (எ) | கோள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் ரூபா 10,165,196 மற்றும் பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 2,049,442 பெறுமதி செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் சொத்துக்கள் கணக்கு ரூபா 12,214,638 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | வளிப் பதனாக்கு முறைமையை ஸ்தாபித்தல் அல்லது உடன்படிக்கை செய்யாதிருக்கும் போது ரூபா 12,770,000 செலவினமாகக் காண்பித்து கடன்கொடுத்தோர் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பாதீட்டு நிதியேற்பாட்டிற்காக ஒதுக்குதலின் பிரச்சனையினால் உரிய தொகை 2023 இல் கடன்கொடுத்தோரில் இருந்து ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உள்ளபடியாக செலுத்துவதற்குள்ள தொகைக்காக மாத்திரம் கடன் கொடுத்தோர் ஒதுக்கம் ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஐ) | கூறுவிலை கோருவதற்கோ அல்லது மின்பிறப்பாக்கி ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது செலவினமாக ரூபா 5,331,709 தொகையும் ரூபா 5,198,715 கடன் கொடுத்தோர் ஒதுக்கமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | விரைவாக கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஒ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் ஆண்டில் கிடைக்கப்பெற்ற முத்திரைக் கட்டண வருமானம் ஆண்டின் முத்திரைக் கட்டண வருமானமாக கருதப்படுவதாக காண்பிக்கப்பட்ட போதிலும் முத்திரைக் கட்டண வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் முத்திரைக் கட்டணம் காசோலை கிடைத்த பின்னர் மாத்திரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 13 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றுக்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 32,601,512 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளுக்குரிய காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்பு பண மீதி ரூபா 2,204,656 ஆக இருந்த போதிலும் ஓய்வூதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 46,923,629 ஆகும். ஆதன் பிரகாரம் ரூபா 44,718,973 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | செலுத்த வேண்டிய பணத்தை இனங்கண்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | கிடைக்க வேண்டிய இறைச்சிக் கடை கேள்வி வாடகை | 2,063,684 | பட்டோலை | பட்டோலை சமர்ப்பிக்கப்பட வில்லை. | பட்டோலை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறவேண்டிய மற்றும் அனுமதிப் பத்திரக் கட்டணம் | 4,326,324 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | பெறவேண்டிய பொழுதுபோக்கு வரி | 295,342 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | கிடைக்க வேண்டிய VAT | 127,092 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | கிடைக்க வேண்டிய விளம்பர அறிவித்தல் | 8,711,264 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | பெறவேண்டிய ஏனைய பெறுவனவுகள் | 189,879 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | ஏனைய பெறுவனவுகள் | 2,998,000 | பேரேட்டுக் கணக்கு | 2024 இன் கணக்குகளில் சரிசெய்யப்படும். | உரிய பேரேட்டுக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 266 (அ) பிரிவு | அமைச்சரின் அங்கீகாரம் இன்றி ரூபா 2,471,517 ஆன இறைச்சிக் கடை கடன்பட்டோர் பதிவளிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரின் அங்கீகாரத்திற்கு உள்ளபடியான வருமானம் பதிவழிக்கும் போதே அனுப்பப்படுகின்றது. இதன் போது கணக்குகளின் வழுக்கள் சரிசெய்தல் மட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 12,888,177 வைப்பு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 810,103,015 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 976,156,225 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான மான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| ஆதன வரியும் வரியும் | 785,505 | 834,504 | 680,471 | 858,443 | 430,905 | 410,476 | 348,491 | 629,703 |
| வாடகை | 15,798 | 20,522 | 29,439 | 13,661 | 29,732 | 20,678 | 22,389 | 20,107 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 9,325 | 9,530 | 5,204 | 4,326 | 9,435 | 5,000 | 3,915 | 5,130 |
| ஏனைய வருமானம் | 16,456 | 20,381 | 24,778 | 13,887 | 18,133 | 17,030 | 14,240 | 24,188 |
| மொத்தம் | 827,084 | 884,937 | 739,892 | 890,317 | 488,205 | 453,184 | 389,035 | 679,128 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஆதனவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட ஆதனவரி வருமானம் ரூபா 820,422,202 ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 327,001,165 அதாவது 40 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்குத் தவறியிருந்தது. | 2024.03.31 ஆம் திகதி வரையில் நிலுவையில் ரூபா 113,352,685 அறவிடப்பட்டுள்ளதுடன் காணப்பட்ட சிக்கலான பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா தொற்று நோயின் அடிப்படையில் ஆதனவரி செலுத்துதல் வீழ்ச்சியடைந்ததுடன் ஆதனங்களைத் தடை செய்தல் போன்ற நடவடிக்கைகளும் சிக்கலாக இருந்தமையால் இந்த நிலைமை எழுந்திருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை ஆதனவரி மீதி ரூபா | 2023 இன் வருடாந்த மதிப்பீட்டுத் தொகையை அதிகரித்துக் கொள்வதற்குரிய மதிப்பீட்டை திருத்தும் அறிக்கை பெறப்படும் | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | 532,240,119 ஆக இருந்த போதிலும் அதில் மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 105,332,307 அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 426,907,812 அதாவது 80 சதவீதத்தை அறவிடுவதற்குத் தவறியிருந்தது. | போது ஏற்பட்டிருந்த தாமத வழுக்களினால் உரிய திருத்தங்களுக்காக தீர்மானத்தை பெறும் போது ஏற்பட்ட தாமதத்தால் ஆதனவரி செலுத்துதல் தாமதமடைந்திருந்தது. | |
| (iii) | நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 47136 ஆதனங்களில் ரூபா 763,796,919 ஆதனவரி நிலுவை காணப்பட்டது. இந்த நிலுவையின் ரூபா 50,001 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடையிலான பெறுமதியினைக் கொண்ட 1265 ஆதனங்களிலிருந்து ரூபா 89,785,947 தொகையும், ரூபா 100,000 தொகைக்கு மேற்பட்ட பெறுமதியுடைய 1112 ஆதனவரி அலகுகளிலிருந்து ரூபா 374,486,520 தொகையும் அறவிட வேண்டியிருந்தது. | ஆதனங்களைத் தடை செய்யும் உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தலிர் தாமதம் அடைந்தமை மற்றும் உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் நிலுவையை அறவிடுவதற்கு தாமதமடைந்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் விசேட ஆதனங்களுக்குரிய மதிப்பீட்டு அறிவித்தல் பகரிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் குறித்துரைத்த திகதியில் செலுத்தப்பட்டிருந்த தரவு முறைமையில் மிகைக் கட்டணம் கணிப்பீட்டின் அடிப்படையில் கணிசமான தொகை நிலுவையாகக் காண்பிக்கப்படுகின்றது. | மேற்படி |
| (iv) | மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் சபைக்கு அறவிட வேண்டிய கழிவுப்பொருள் கட்டண வருமானம் ரூபா 15,568,418 ஆகும். | 2024 மார்ச் வரையில் ரூபா 3,351,369 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவைக் கழிவுப்பொருள் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவைக் கேபிள் ரீ.வீ வருமானம் ரூபா 3,063,101 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவைப் பணம் அறவிடப்படல் வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர சபைக்குச் சொந்தமான 26 கடைகளில் இருந்து வாடகையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரத்மலானை புதிய வியாபார சந்தைத் தொகுதியில் கடைகள் வாடகைக்கு வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் குகுவல சந்தைக் கட்டிடத் தொகுதியில் இலக்கம் 04 என்ற கடை கேள்வி கோருவதற்காக ஆகக்குறைந்த கேள்வி தீர்மானித்துக்கொள்வதற்கு மதிப்பீட்டுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் தெஹிவல சந்தைக் கட்டிடத் தொகுதியில் 16 கடைகள் உடைந்த நிலைமையில் காணப்பட்டமை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையால் இந்த சந்தைத் தொகுதியை கையேற்றமையினால் உடைந்த கடைகள் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யப்படாமையின் காரணமாக வாடகைக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது. | உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு கடைகளை வாடகைக்கு வழங்குதல் வேண்டும். |
| (ii) | வாடகையாளர்களினால் வாடகைக்குப் பெறப்பட்டு வியாபார நடவடிக்கைகள் செய்யப்படாமல் மூடப்பட்டிருந்த 53 கடைகள் சந்தைத் தொகுதியில் காணப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்தக் கடைகளிலிருந்து ரூபா 1,892,236 தொகை அறவிட வேண்டியிருந்தது. அந்தக் கடைகளிலிருந்து நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்குக் கையேற்று பழுதுபார்த்தல் மேற்கொண்டு ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடைந்து போனதன் அடிப்படையில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டதுடன் நிலுவையை அறவிடுவதற்காக மீள் நினைவூட்டலும் உரிய வாடகையாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கும், உடன்படிக்கையின் பிரகாரம் கடைகளை கையேற்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 5,658,694 ஆன 33 கடைகள் முத்திரை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்தக் கடைகளை முத்திரை இடுவதற்காக சகல தகவல்களும் வருமான பரிசோதகர் பிரிவிற்குஅனுப்பப்பட்டுள்ளது. | வாடகை செலுத்தாத கடைகளை முத்திரை இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட 15 ஆதனங்களில் 10 ஆதனங்கள் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 1,870,580 ஆக காணப்பட்டது. | நிலுவை செலுத்தாத ஆதனங்கள் நகர சபைக்கு கையேற்பதற்கு வருமான பரிசோதகர் பிரிவிற்கு அனுப்பபட்டுள்ளதுடன் சரணங்கர பொலிஸ் காவல் நிலையம் போன்ற ஆதனங்களுக்காக முன்னைய உடன்படிக்கை இரு தரப்பினரிடம் காணப்படாமையினால் நிலுவை அறவிடப்பட முடியாதிருந்தது. | நிலுவை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (v) | 2023 ஆம் ஆண்டுக்காக சிட்டையிடப்பட்ட வியாபாரம் மற்றும் கைத்தொழில் வரி வருமானம் ரூபா 13,082,400 ஆக இருந்த போதிலும் ரூபா 7,080,200 ஐம்பத்து நான்கு சதவீதம் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | வியாபார வரி அறவிடுவதற்கு மீள் நினைவூட்டல் கடிதம் மூன்று தடவை உரிய வியாபார நிலையங்களுக்கு அனுப்பப்பட்டதுடன் அவ்வாறு செலுத்தப்படாதிருந்த வியாபாரங்களின் நிரல் பிரதம வருமானப் பரிசோதகருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | வியாபார மற்றும் கைத்தொழில் வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | 2023 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 97,930,533 நிலுவை வியாபார மற்றும் கைத்தொழில் வரி மீதியில் மீளாய்வாண்டில் ரூபா 10,343,452 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 87,587,081 அதாவது 89 சதவீதம் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு மீள் நினைவூட்டல் கடிதம் மூன்று தடவை உரிய வியாபார நிலையங்களுக்கு அனுப்பப்பட்டதுடன் நிலுவை வியாபார வரி பட்டியல் நிலுவையை அறவிடுவதற்கும் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காகவும் பிரதம வருமானப் பரிசோதகருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வியாபார மற்றும் கைத்தொழில் வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வியாபார | 2023 ஆம் ஆண்டில் வியாபார அனுமதிப்பத்திரம் பெறாத | நிலுவை வருமானம் |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப் பத்திர வருமானம் ரூபா 9,530,300 ஆக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 5,203,976 ஆகும். அது சிட்டையிடப்பட்ட வருமானத்தில் ஐம்பத்தைந்து சதவீதம் ஆகும். | வியாபாரங்களின் பட்டியலொன்று சட்டரீதியான நடவடிக்கையின் மூலம் அறவிடுவதற்காக வருமானப் பரிசோதகர் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அறவிடப்படல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்க வேண்டிய 1943 வியாபார நிலையங்கள் காணப்படுவதாக காண்பிக்கப்பட்ட போதிலும் 730 வியாபார நிலையங்களுக்காக மாத்திரம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 1213 வியாபார நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமல் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் வியாபார அனுமதிப்பத்திரம் பெறாத வியாபாரங்களின் பட்டியலொன்று சட்டரீதியான நடவடிக்கையின் மூலம் அறவிடுவதற்காக வருமானப் பரிசோதகர் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத வியாபாரங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் தேசிய மிருககாட்சி சாலைகள் திணைக்களத்தின் கழிவுகள், கரையோர வீதி இருபக்கமும் மற்றும் இரத்மலானையில் நாளாந்த சந்தைக்கு முன்னால் உள்ள நிலையங்களில் வாகனம் நிறுத்தும் கட்டணம் அறவிடும் கேள்வி கோரி வழங்கப்பட்ட நபரினால் 2022 திசெம்பர் முதல் 2023 மார்ச் வரையான காலத்திற்குரிய வாகன தரிப்பிடங்களின் கட்டணமாக ரூபா 1,233,582 சபைக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் பிணைமுறித் தொகையை குறைத்து மேலும் ரூபா 868,582 அறவிட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவைப்பணத்தை செலுத்துமாறு கேள்விதாரருக்கு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் நிலுவைப் பணம் செலுத்தாதிருந்தமையால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு 2024.01.24 ஆம் திகதி சட்டப் பிரிவிற்கு கோவை அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவைப் பணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) மீளாய்வாண்டின் ஆரம்பத் திததியில் காணப்பட்ட ரூபா 17,821,343 நிலுவை அறிவித்தல் பதாதை மீதி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,793,456 தொடர்ந்தும் அறவிட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை அறிவித்தல் பதாதை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

## 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 1995 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்திற்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,437,078 அறவிட வேண்டியிருந்தது. | மோட்டார் கார் வாகனத்தின் மிகைக் கட்டணத்திற்கு பொறுப்பு வாய்ந்தவர் மரணமடைந்தமை மற்றும் முகவரியை கண்டறிவதற்கு முடியாமையின் அடிப்படையில் அறவிடுவதற்கு முடியாதிருந்த தொகை ரூபா 137,312 ஆகும். லெப்டொப் கொள்வனவு செய்தல் தொடர்பாக மிகைக் கட்டணத்தின் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ளூராட்சி ஆணையாளரிடம் ஆலோசனைக்காக 2022.05.31 ஆந் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் இதுவரையில் பதில் கிடைத்திருக்கவில்லை. பதில் கடிதத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சமையலறைக் கழிவுகளை விற்பனை செய்யும் செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 17,443,650 செலவினத்தைச் செய்து 17444 தொன் சமையலறைக் கழிவுகள் கரதியான கழிவுப் பொருள் தளத்தில் போடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்திய பின்னரும் 2023 | உடன்படிக்கை செய்யப்பட்ட தரப்பினரால் கவனத்தில் கொள்ளக்கூடிய சமையலறைக் கழிவுகளில் போதியளவு சேகரிக்காமையின் அடிப்படையில் முன்னர் உள்ளவாறே கரதியான கழிவுப்பொருள் தளத்தில் போடப்பட்டிருந்ததுடன் | கழிவுப் பொருட்களிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மே முதல் திசெம்பர் வரை சேகரிக்கப்படுகின்ற சமையலறைக் கழிவுகளின் தொன் அளவு கவனத்தில் கூடிய அளவில் அதிகரித்திருந்த போதிலும் சபையினால் கழிவுப் பொருட்களை ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கோ அல்லது கூட்டுப்பசளை செயற்திட்டத்தை அமுல்படுத்தி பசளை விற்பனை தொடர்பிலோ கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுப்பசளை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக போதியளவான நில அளவை கண்டறிதலில் பிரச்சனை ஏற்பட்டதன் அடிப்படையில் இதுவரை கூட்டுப்பசளை செயற்திட்டம் ஒன்றிற்குத் தேவையான இடவசதிகளை தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | CFL மின்குமிழ், டெம்பட் கிளாஸ், தகரம், கூறுகளாக்கப்பட்ட கலவைப் பொலித்தீன், கூறுகளாக்கப்பட்ட அலுமினியத் துண்டுகள், அலுமினிய உணவு உறைகள், பயன்படுத்தப்பட்ட பழைய டயர், இறப்பர் சார்ந்த உற்பத்திகள், மரக்கிளை பகுதிகள் மற்றும் துண்டங்கள், இலைகுழைப் பகுதிகள் சகல வகையான இலத்திரனியல் கழிவுப் பொருட்கள், அகற்றப்படுகின்ற தூரிகைகளைச் சேகரித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான திட்டமுறைமை ஒன்று சபையினால் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டில் பொருத்தமான கொள்வனவாளர் முன்வராமையினால் இந்த கழிவுப் பொருட்களை விற்பனை செய்வதற்கு முடியாதிருந்தது. | உக்காத கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கான திட்ட முறைமை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊள்ளுராட்சித் திணைக்களம் (மேல் மாகாணம்) இனால் 2002 மே 17 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட வீதி விளக்கு பராமரிப்பு, பழுதடைந்த மற்றும் செயலிலுள்ள மின்குமிழ்களின் தூண் ஒன்றின் பெயரிடப்பட்டு (இலக்கமிடப்பட்டு) பயன்படுத்தப்படுகின்ற மின்குமிழ் முதலியவற்றை பொருத்தப்பட்ட | தற்போது நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குத் தூண்களுக்கு இலக்கமிடும் செயற்திட்டத்திற்காக 2024 பாதீட்டில் ரூபா 1,000,000 தொகை ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. | மின் தூண்களை இலக்கம் இடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியைக் கண்டறியக் கூடிய திட்ட முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் சபையின் பொறுப்பாக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குத் தூண்கள் இனங்கண்டு இலக்கமிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 1983 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்திலிருந்து கொண்டு வரப்படுகின்ற சபைக்குக் கிடைக் வேண்டிய ரூபா 1,735,225 வைப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது 1983-2017 வரை சபையில் வைப்புப்பணம் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாயின் உரிய நிறுவனங்களிலிருந்து மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புணிகள் நிறைவு பெற்ற உடன் வைப்புப் பணம் மீளப்பெறல் வேண்டும். |
| (இ) | காணி, கட்டிடம், வீதிகள், மதகுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் காணி மற்றும் கட்டிடங்களைக் கணக்கீடு செய்வதற்காக மதிப்பீடு செய்வதற்கான தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மோசடிக்குரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு ரூபா 145,490 ஆன அந்தத் தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது அந்தத் தொகை குறைக்கப்பட்ட வைப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்து இறுதித் தீர்மானம் தற்போது வரை கிடைக்காதிருந்தமையால் இந்தத் தொகையை தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்ததுடன் அந்தத் தவறை மேற்கொண்ட ஊழியர் சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். | உரிய பணத்தை அறவிடல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் மாநகர சபைக்குரிய 206 காணிக்கூறுகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த காணிகளில் இருந்து உரித்துறுதி அல்லது உரிமைச் சான்றிதழ் 48 நிலக்கூறுக்களுக்காக மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | உரித்துறுதி இன்றிய சகல காணிகளுக்காகவும் உரித்துறுதி சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு சபை தீர்மானித்துள்ளது. | காணிகளுக்கு உரித்துறுதி / உரிமை சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | அவதானிப்புக்கள் | கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | 2023 நவம்பர் 31 ஆம் திகதிய பெறுகைக் குழு கோலாஸ்பரல் அலகொன்று ரூபா 28,800 விலையில் கொள்வனவு செய்வதற்கு பரிந்துரை செய்திருந்த போதிலும 2023 திசெம்பர் மாதம் பரல் ஒன்று ரூபா 33,000 வீதம் 15 பரல்கள் வேறு நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 63,000 மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கேள்வி நடைமுறைகள் பூர்த்தி செய்யப்படும் வரை வேலைத்தளங்களின் பணிகள் தொடர்ச்சியாக பேணிச் செல்லும் நோக்கில் 50 சதவீத அடிப்படையில் முன்னைய வழங்குனருக்கு கட்டளை வழங்கப்பட்டிருந்தது. | சபைக்கு நலன் வாய்ந்த பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 01 கோலாஸ் பரல் ரூபா 34,200 வீதம் 25 பரல்கள் 2023 ஏப்ரல் 06 ஆம் திகதி கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் பொருட்கள் 2023 நவம்பர் 21 ஆந் திகதியே களஞ்சியத்திற்குக் கிடைத்திருந்தது. எனினும் இந்தக் காலத்தில் பரல் ஒன்றின் விலை ரூபா 28,800 வரை குறைவடைந்திருந்த போதிலும் கட்டளை இரத்துச் செய்யப்படாமையின் காரணமாக ரூபா 135,000 தொகை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | இவ்வாறான சம்பவங்களின் பின்னர் முன்கொண்டு செல்ல முடியாத முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு கண்காணிக்கப்படுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மிஹிந்து மாவத்தை சிகிச்சைக் கட்டிடத்தின் உடற்பயிற்சி நிலையத்தை நிர்மானிக்கும் ஒப்பந்தகாரரால் 40 சதவீத வேலைப்பகுதி மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருக்கும் போது 60 சதவீத விலை அதிகரிப்பும் மற்றும் காலத்தை நீடித்தலும் கோரப்பட்டிருந்தமையால் ஒப்பந்தத்தின் மிகுதி வேலைப்பகுதிகள் சபை ஊழியர்களினால் நிறைவேற்றுவதற்கு 2022 நவம்பர் பொதச்சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதன் மிகுதி வேலைப்பகுதிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்தின் மிகுதி வேலைப்பகுதிகளை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான தொழில்நுட்ப அறிவு ஒன்று சபையின் கீழ் இருக்கின்ற ஊழியர்களுக்கு காணப்படாதிருக்கின்றமையால் மதிப்பீட்டை தயாரித்தல் சபையில் பதிவு செய்த ஒப்பந்தகார நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயற்திட்டத்தின் மிகுதி வேலைப் பகுதிகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 04 செயற்திட்டங்களுக்காக ரூபா 206,335,022 தொகைக்காக பாதீட்டு நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக கட்டிடப் பொருட்களின் விலைகள் அசாதாரணமாக அதிகரித்தமையினால் இந்த செயற்திட்டத்தினை நிறைவேற்றுதல் நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் கடன் கொடுத்தோர் ஆக ஏற்பாடு எதிர்வரும் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பாதீட்டு நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வுபெற்ற, மரணமடைந்த மற்றும் இடமாற்றலாகிச் சென்ற ஊழியர்களிடமிருந்து ரூபா 4,412,457 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்தக் கடன் மீதிகளுக்குரிய கடன்தாரரர்கள் தொடர்பான விபரங்களைக் கண்டறிதல் வசதியீனமாக இருந்த போதும் அந்த கடன் மீதி தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்காக விசேட முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் எதிர்காலத்தில் அந்த தொகையை அறவிடுதல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 வாகன முறைமை முகாமைத்துவம்

| அவதானிப்புக்கள் | கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சுபைக்குச் சொந்தமான செயலிழந்த நிலையில் 22 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவற்றை பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களைப் பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியில் வினைத்திறனாக இல்லாதிருந்தமையால் அந்த வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை இந்த ஆண்டின் போது விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பழுது பார்த்து பயன்பாட்டுக்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |